அவர்களுடைய ஆட்சியில் திறந்து வைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

கண்காணிப்பு மையம்

***8560—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி சிப்காட் பகுதியில் சுற்றுச்சூழல் கண்காணிப்புக் கட்டுப்பாட்டுக் குழுமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, சிப்காட் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் புகைப்போக்கி வழியாக வெளியேற்றப்படும் புகையின் தரத்தை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் காற்று மாசு கண்காணிப்பு மையம் (CARE AIR CENTRE) *மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், கூடுதல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு குழுமம் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

2013 பிப்ரவரி 8]

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி, சிப்காட் தொழிற்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 500 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதில் 10 தனியார் மின் உற்பத்தித் தொழிற்சாலைகள், 50 இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் மற்றும் கார்பன் மற்றும் டயர் தொழிற்சாலைகள் போன்ற மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளுடன், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் சேகரிக்கப்படும் நச்சுக் கழிவுகளைப் பதுக்கி, செயல் இழக்கச்செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. மேற்கண்ட தொழிற்சாலைகளால் காற்றில் ஏற்படும் மாசு தவிர நிலத்தடி நீரின் தன்மையும் கெட்டு வருகிறது. இதே சூழ்நிலை தொடருமானால் வருங்கால சந்ததியினர் வாழத் தகுதியற்ற பகுதியாக கும்மிடிப்பூண்டி மாறிவிடுமோ என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர். ஆகையால், நீர் மற்றும் காற்றின் மாசைக் கண்காணிக்க 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பு மையம் (Monitoring Unit) கண்டிப்பாக அந்தப் பகுதியில் தேவை என்பது அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாக இருக்கிறது. ஆகையால் இந்தப் பகுதியில் 24 மணி நேரமும் இயங்கும் Monitoring Unit அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி, சிப்காட் தொழிற்பேட்டையில் 39 சிவப்பு வகை பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. 6 சிவப்பு வகை நடுத்தர தொழிற்சாலைகள் உள்ளன. அனைத்துத் தொழிற்சாலைகளிலுமே சுற்றியுள்ள காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் பொருட்டு, ஒரு தொடர் காற்றுக் கண்காணிப்பு மையத்தினை வாரியம் அமைத்துள்ளது. வாரத்தில் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக உமிழ்வுகளில் ஏற்படும் அளவுகள் உடனுக்குடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய மையம் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததோடு, இது மத்திய அரசால் பெரிதும் பாராட்டப்பட்டது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்களின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும்போது

இம்மையத்தின் ஒலி எழுப்பான்கள்மூலம் எச்சரிக்கை மணி ஒலிப்பதோடு, அக்காற்றின் தன்மை அளவு மீறும் தொழிற்சாலைகளுக்கு மாவட்டப் பொறியாளர் மற்றும் உறுப்பினர்-செயலாளரால் உடனுக்குடன் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு குறுந்தகவல் அனுப்பப்படும். தானாக ஒலி அனுப்பும் எச்சரிக்கை மணி அனைத்துத் தொழிற்சாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் அச்சம் வேண்டாம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த ஆண்டு 34 மாவட்டப் பொறியாளர்களுக்குக் கையடக்கக் கணினி வழங்கப்பட்டுள்ளது. அதனால் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொழிற்சாலைகளில் ஏற்படும் குறைபாடுகள் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதியில் உடனுக்குடன் அந்தத் தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டு, தொடர்ந்து நல்ல நிலைமை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று தேர்வாய்க்கண்டிகை சிப்காட் பகுதியில் கார்பன் தொழிற்சாலைகள் மற்றும் Tyre manufacturing units இயங்கி வருகின்றன. ஆகவே, இங்கும் 24 மணி நேரம் இயங்கும் ஒரு Monitoring unit அவசியம். அதை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாய்க்கண்டிகையில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்தில் இருக்கிற 115 காற்றுமூலம் மாசு ஏற்படுத்துகின்ற தொழிற்சாலைகளில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கண்காணிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள எந்தத் தொழிற்சாலை மாசின் அளவை மீறுகிறதோ உடனுக்குடன் அந்தத் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தப்பட்டு, மாவட்டப்

பொறியாளர்கள் மற்றும் உறுப்பினர்-செயலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

கட்டட வசதி

***7335—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, முத்துநாயக்கன்பட்டி மற்றும் மாங்குப்பையில் கால்நடை மருத்துவ நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலங்களிலெல்லாம் பாழடைந்த, பழைய கட்டடங்களில்தான் கால்நடை நிலையங்கள் இயங்கி வந்தன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், மூன்றாவது முறை முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2011-2012 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டிய 877 கட்டடங்களில் 661 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 2012-2013 ஆம் ஆண்டிலே கட்டப்பட வேண்டிய கால்நடை நிலையங்களில், 649 கட்டங்களிலே 271 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளிலே ஏறக்குறைய 932 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.